Rotary

Rotary Opens Opportunities

best
be excellent in Serving together



Rtn. HOLGER KNAACK
RI President

கோட்டை முரசு

# KOTTAI MURASU



Rtn. A.L. CHOKKALINGAM
District Governor

RID 3000 | GOVERNOR'S MONTHLY NEWSLETTER | JULY 2020 | ISSUE-1



# From the pen of the Governor



அன்பு நண்பர்களே,

நாம் ஆவலுடன் காத்திருந்த “best” ஆண்டு வந்து விட்டது. அனைவருக்கும் வளமும், நலமும் நிறைய வாழ்த்துகிறேன். கோவிட் – 19 என்கிற கருமேகம் சூழ்ந்து நமது பணிகளை கடந்த 3 மாதங்களாக முடக்கி விட்டது. எப்போது விலகும் எனத் தெரியாமல் தொடர்கிறது. ஆனாலும் நமது உறுப்பினர்கள் எதிர்பாராமல் திடீரென வந்த கோவிட் சுனாமிக்கு இடையிலும், அச்சமும், கவலையும் இருந்தாலும் விடாமல், ஆங்காங்கே பெருமளவில் மக்கள் நலப்பணிகளைச் செய்தீர்கள்; செய்கிறீர்கள். இதே உத்வேகத்தோடு, நம்பிக்கையோடு நமது ஆண்டைத் தொடங்கி, நாம் திட்டமிட்டுள்ள அத்துணை பணிகளையும் சிறந்த முறையில் செய்து முடிப்போம். நமது பன்னாட்டுத் தலைவர் Rtn. ஹோல்கர் நாக் அவர்கள் தந்துள்ள நமது ஆண்டிற்கான அற்புதமான கருப்பொருள் "Rotary Opens Opportunities" – “ரோட்டரி வாய்ப்புகளை திறக்கிறது” ஆகும். அது, நாம் ரோட்டரிக்கு உழைப்பு, நிதி, நேரம் ஆகியவற்றை வழங்குவதற்கு பிரதிபலனாக அளவில்லா நல்வாய்ப்புகளை தொடர்ந்து வழங்குகிறது என்பதை உறுதி செய்கிறது. எனவே ரோட்டரி நமக்கு வழங்கியுள்ள கொடையாகிய நல்ல நண்பர்கள், நல்ல நிர்வாகிகள், சங்கத் தலைவர்கள், செயலாளர்கள், சங்க நிர்வாகிகள் என அனைவரும் இணைந்து மக்கள் பணியில் சிறந்து விளங்குவோம். இதுவே நமது தாரக மந்திரமான ‘’be excellent in serving together” என்பதன் பொருளாகும். எனவே வாருங்கள் ஜூலை 1 இரத்ததான முகாமில் தொடங்கி, Super 66 திட்டங்கள் என ஒவ்வொன்றையும் திட்டமிட்டபடி செய்து முடிப்போம். பயனாளிகளின் மலர்ந்த முகங்களைப் பார்த்து நாமும் அகமகிழ்வோம்.

அன்புடன்

**Rtn. அ.லெ.சொக்கலிங்கம்**

மாவட்ட ஆளுநர்

# From the Editor's Desk

Greetings Rotarians!

Welcome to another new Rotary year. Rotary Opens Opportunities. This year, COVID 19 has turned turtle many people of the world. There are many who need a helping hand to get through these difficult times. Rotarians the world over have seized this moment and have undertaken many initiatives to help the needy and also support caregivers. As we look to the future when the world would be rid of this disease, there still remains a lot to be done.

My congratulations to the "best" presidents and secretaries. I am sure that you have taken on this responsibility this year with a vision. Kindly work out a plan – date wise so that your dreams are realized and you can look back with satisfaction. We also request that you send information about your outstanding projects to us every month so they may be published in the GML.

This year will be challenging too. But it is during these challenging times that we Rotarians find our calling. Let us serve together and make this year memorable with nothing but excellence as our target in everything we do.

Yours in Rotary Service

**Rtn. Dr. Jayson Keerthy Jayabarathan,** M.Tech., Ph.D,

GML Editor.

## EDITORIAL TEAM



Rtn. Dr. Jayson K. Jayabarathan
Editor



Rtn. RM. Lakshmanan
Co-Editor



Rtn. M. Kumarappan
Co-Editor



Rtn. V. Rajendran
Associate Editor



Rtn. Alaguraam Jothi
Associate Editor



Rtn. Vinitha Mohan
Associate Editor

# Message from the
# RI President



Dear Rotarians, Rotaractors, and friends,

This does not seem like a time for great optimism, but it has to be. Long before Rotary was founded, the world dealt with great crises that tested humankind's ability to progress and endure. In the age of Rotary, the world has faced many more catastrophes; however, we have survived, and every step of the way, Rotary has helped the world heal.

Every great challenge is an opportunity for renewal and growth. I revealed the theme of Rotary Opens Opportunities at the International Assembly in San Diego just as the COVID-19 crisis was beginning, but these are words that I have believed for many years.

Rotary is not just a club that you join; it is an invitation to endless opportunities. We believe in creating opportunities for others and for ourselves. We believe that our acts of service, large and small, generate opportunities for people who need our help, and that Rotary opens opportunities for us to live a richer, more meaningful life, with friends around the world, based on our core values.

Governments and institutions are gaining a greater appreciation for the types of public health partnerships that are critical to our work. People stuck at home, eager for greater connections and hungry to help their communities, are now embracing the values we have promoted since our beginning.

All of this is positive news, but just because there are greater opportunities than ever for Rotary to thrive does not guarantee that we will succeed. The world is changing rapidly — and was doing so even before this crisis. People were starting to move away from regular lunch meetings and toward online gatherings. Friendships were being cultivated and revived in social media relationships even before most of our meetings moved to Zoom and Skype. Younger generations have a strong desire to serve — but have questioned whether they could play a meaningful role in organizations like Rotary or whether they might make a bigger impact forming different types of connections. Now is the time to put everything on the table, test new approaches, and prepare Rotary for the future.

The COVID-19 crisis has forced all of us to adapt. This is good, and our new Action Plan specifically calls on us to improve our ability to adapt. But adaptation is not enough. We need to change, and change dramatically, if we are to face the challenges of this new age and provide the Rotary that the world so desperately needs.

This is our great challenge, not just in the next year but into the future. It is up to us to remake Rotary for these new times — to wholeheartedly embrace the ideas, energy, and commitment of young people eager to find an outlet for idealism. We must become an organization fully enmeshed in the digital age, not one that simply looks for online ways to keep doing what we have always done.

The world needs Rotary now more than ever. It is up to us to make sure that Rotary Opens Opportunities for generations to come.

**HOLGER KNAACK**

President, Rotary International.

# Super 66

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்

“செய்யவேண்டிய கடமையை அறிந்த அறிவாளிகள், தம்மிடம் கொடுக்க இடம் இல்லாக் காலத்திலும், உழைக்கும் சக்தி அற்றவர்க்கு உதவத் தயங்க மாட்டார்கள்”

அன்பு தோழர்களுக்கு ரோட்டரியின் அன்பு வணக்கங்கள்.

சமுதாய சேவையில் மிகுந்த ஈடுபாடுடன் மாவட்டம் 3000 செயல்பட்டு வருவது நாம் அறிந்ததே. 2020 இல் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நாம் நமது சமுதாய சேவையை சிறப்பாகத் தொடரும் வகையில் சூப்பர் டபுள் – 6 என்னும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரோட்டரியின்– 7 Areas of Focus (இந்திய ரோட்டரியின் – 8 Verticals of Focus) மற்றும் வட்டார தேவைகளை கருத்தில் கொண்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாதத்தின் முதல் வாரத்தில் ரோட்டரி சங்கங்கள் தனித்தனியாக செயல்படவும், மூன்றாவது வாரத்தில் வட்டாரத்திலுள்ள சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்படவும் வாய்ப்பளிக்கிறது. இது மட்டுமல்லாமல் ஜூலை 1 அன்று தானத்தில் சிறந்த தானமான இரத்த தானத்தில் ரோட்டரி 3000 இவ்வருடத்தின் முதல் சேவையைத் தொடங்க இருந்தது. 2020 – 21 அணி எந்தவித ஐயமும் இல்லாமல் மிக சிறப்பான சூப்பர் டபுள் 6 திட்டத்தை தெளிவாக செயல்படுத்தும் விதமாக கையேடு ஒன்றும் விநியோகிக்கப்பட உள்ளது. இந்த சூப்பர் டபுள் 6 திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக முடிக்கும் சங்கங்களுக்கு Presidential Citation கிடைக்க அதிக வாய்ப்பு உள்ளது. மேலும் இந்த சூப்பர் டபுள் – 6 திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் சங்கங்கள், தலைவர்கள், செயலர்கள் பெஸ்ட் ஆண்டின் சிறந்த சங்கம், சிறந்த தலைவர் மற்றும் சிறந்த செயலர் விருதுகளை வெல்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.



இத்திட்டத்திற்கு அடிக்கோலிட்ட நமது பெஸ்ட் ஆண்டின் மாவட்ட ஆளுநர் Rtn. A.L. சொக்கலிங்கம் அவர்கள் மற்றும் மாவட்ட பயிற்சியாளர் Rtn. M. முருகானந்தம் அவர்களுக்கும் மற்றும் இத்திட்டத்தை உருவாக்கவும் செயல்படுத்தவும் உதவிய அனைத்து தோழர்களுக்கும் ரோட்டரி சார்பாக மனமார்ந்த நன்றி மற்றும் வாழ்த்துக்கள்.

**Rtn. R. Subramani @ RBS Mani**
மாவட்டச் செயலாளர், சிறப்பு திட்டங்கள்
**Mob : 73737 23456**

| Month | Club Level | Regional Level |
|---|---|---|
| August | Rain Water Harvesting | Tree Plantation |
| September | One Day RYLA | 32 Happy Schools |
| October | Health Kit Distribution | Polio Bus |
| November | Vocational Projects | Job Fair |
| December | Health Camp | Mega Cardiac Camp |
| February | Rotary Information Board | Traffic Awareness |

**Club Level Projects : 1st Saturday of the month** | **Regional Level Projects : 3rd Saturday of the month**

# சேவைச் சரித்திரம்

உலகில் முன்தோன்றி மூத்த சேவைச் சங்கம் ரோட்டரி. 115ஆண்டுகளாகச் சுழலும் காலச்சக்கரம். மூத்தோர், இளையோர், வளரிளம்பதின்மர்கள் என அனைத்து வயதினருக்கும் வாய்ப்புகளை வாரி வழங்கி ஒருங்கிணைத்து ஓங்கி உலகளந்த உன்னத அமைப்பு ரோட்டரி.

இங்கிலாந்தில் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் முறையே உருவாகிய மெசானிக் லாட்ஜ், ஒய். எம். சி. ஏ போன்ற அமைப்புகள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், பின்னர் மற்ற கண்டங்களிலும் பரவினாலும், ரோட்டரி அமைப்பு உறுப்பினர் கட்டமைப்பிலும், சேவை அளவிலும் மாறுபட்டு இருப்பதால் உலகின் முதல் சேவைச் சங்கம் ரோட்டரியே ஆகும்.



20ஆம் நூற்றாண்டின் முதல் 10 ஆண்டுகளில் பல சாதனைகள் நிகழ்ந்தன : ரைட் சகோதரர்களின் விமானப் பயணச் சோதனை, வானொலி ஒலிபரப்பு, பெண்ணிய அதிர்வு, இளம் துருக்கியர்களின் வெற்றி மற்றும் 1905ல் ரோட்டரி உருவாக்கம். ரோட்டரியின் முன்னோடியான செஸ்லி பெர்ரி இந்த 20ஆம் நூற்றாண்டின் துவக்கக் காலம் பற்றித் துல்லியமாகக் குறிப்பிட்டுள்ளார். “அப்போது வணிகச் சபைகள், வணிக அமைப்புகள், சமுதாய பொதுச் சேவை நிதி, செஞ்சிலுவைச் சங்கங்கள், சாரணர்கள், விமானங்கள், வானொலி, தொலைக்காட்சி, தானியங்கி வாகனங்கள் ஆகிய வசதிகளும், வாய்ப்புகளும் இல்லாத ஒருகாலம்”. அந்தக் காலக் கட்டத்தில் வணிகம் பெரும் சுயநல முயற்சியாகவே இருந்தது. வாடிக்கையாளர், தொழிலாளர், பொருள் தரம் முக்கியத்துவம் என்பதைவிடத் தனது வணிகம் மட்டுந்தான் முக்கியம் என்ற அகோர முதலாளித்துவ உணர்வுடன் 'The Business of America is Business' என்ற போக்குடன் அமெரிக்கா இயங்கி வந்தது. இந்தச் சூழலில் தான் சிகாகோ நகரின் இளம் வழக்கறிஞர் பால் ஹேரிஸ் நட்புறவும் வணிகமும் ஒருசேர மேன்மையடையும் வகையிலான ரோட்டரி சங்கத்தைத் துவக்கினார்.

சிகாகோ ரோட்டரி சங்கம் ஐந்தாண்டுகளில் 1910ல் 140 உறுப்பினர்களோடு ”லாபத்திற்காக இயங்காத கழகம்” (not for profit corporation) என்று பதிவுசெய்து கொண்டது. 1905 முதல் 1910 வரையிலான ஐந்தாண்டுகளில் 14 சங்கங்கள் துவங்கப்பட்டு, முதல் ரோட்டரி மாநாடு, 1910ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் பால் ஹேரிஸ் தலைமையில் கூடியது.

1905ல் துவங்கி அடுத்த பத்தாண்டுகளில் பன்னாட்டு அமைப்பாக ரோட்டரி உயர்ந்தது. 1917ஆம் ஆண்டு ரோட்டரி அறக்கட்டளைக்கு வித்திடப்பட்டது. முதலாம் உலகப்போர், அதற்குப்பின் பொருளாதாரப் பின்னடைவு, இரண்டாம் உலகப்போர் என 1920 முதல் 1945 வரை இருபத்தைந்து ஆண்டுகள் ரோட்டரி கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்துச் சிறப்பான வரலாற்றுச் சாதனைகளையும் நிகழ்த்தியது.

சங்கம் துவங்கிய இரண்டாம் ஆண்டில் சங்கத்தின் நோக்கங்களுள் ஒன்றாக சமுதாய அக்கறை சேர்க்கப்பட்டது. ”We must perform a civic service of some kind ...” என்ற உறுப்பினர் ஒருவரின் முன்மொழிதல் ஏற்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு சிகாகோ புறநகர் பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த இளைய, வசதியற்ற மருத்துவர் ஒருவர் தனது மருத்துவப் பணிக்குப் பயன்படுத்தி வந்த குதிரை இறந்து போனது. அவருக்கு உதவி செய்யும் வகையில் சிகாகோ ரோட்டரி சங்கம் உடனடியாக 150 டாலர்கள் திரட்டி அவருக்குக் குதிரை ஒன்றை வாங்குவதற்கும் அதனால் அவர் பல இடங்களுக்குச் சென்று மருத்துவச் சேவை அளிப்பதற்கும் உதவியது. இதுதான் ரோட்டரி செய்யத் துவங்கிய சேவையின் முதல் கட்டம்.

இதன் தொடர்ச்சியாக சிகாகோ நகரின் அவசரத் தேவையான பொதுக் கழிப்பறை ஒன்றை 1907ஆம் ஆண்டு 20,000 டாலர்கள் செலவில் பலசமுதாய அமைப்புகள், நகர நிர்வாகத்தினர் உதவியோடு, பல இடர்ப்பாடுகளுக்கு இடையில் ரோட்டரி கட்டி முடித்தது. இதுதான் ரோட்டரியின் முதல் அதிகாரப்பூர்வமான சேவையாகும். உள்ளூர் ஒய்.எம். சி.ஏ. அமைப்பு, ”The Rotary Club of Chicago has now shown reason for its existence” என்று பாராட்டியது. ஆனாலும் கூட ஆதாயத்திற்காகச் செய்யும் சேவை எனச் சிலர் நம்ப மறுத்தனர் என்று பால் ஹேரிஸ் பதிவு செய்துள்ளார்.

மனிதன் நான்கு காரணிகளுக்காக ஊக்கப்படுகிறான் என்று மனிதவள மேம்பாட்டு வல்லுநர்கள் கூறுகிறார்கள் : பணம், அந்தஸ்து, அங்கீகாரம், மனநிறைவு. நான்காவது காரணியான மனநிறைவு என்ற உணர்வுதான் தலைமுறை தலைமுறையாக ரோட்டரி உறுப்பினர்களைச் சேவையில் முழுக்க ஈடுபடுத்துகிறது. சேவை செய்வதே ஆனந்தம்.



**Rtn. R. Raja Govindasamy**
**District Secretary,**
**TRF**

# Core Team Introduction

முன் ஏர்

Chairman : **Rtn. A. MOHAMED MANSOOR,** RC of Pudukkottai King Town
Secretary : **Rtn. RU. RAMAN,** RC of Pon Pudupatti

**Date : 28-09-2019**
**Place : K. V. Mahal, Pudukkottai**











# Pre AGTS

அகரம்

Chairman : **Rtn. R. SOUNDARAPANDIAN,** RC of Theni
Secretary : **Rtn. VELMURUGAN**, RC of Theni

**Dates : 8,9-11-2019**
**Place : Thekkady**











# Pre PETS-SETS

Chairman : **Rtn. Dr. KH. Salim,** RC of Pudukkottai Mid Town
Secretary : **Rtn. Er. Sinnaiah,** RC of Pudukkottai Mid Town

**Date : 28-12-2019**
**Place : K. V. Mahal, Pudukkottai**




# Bon Voyage

**Date : 11-02-2020**
**Place : Green Palace Hall, Pudukkottai**
**Host : All Rotary Clubs of Pudukkottai**



# ASSISTANT GOVERNORS' TRAINING SEMINAR

Chairman : **Rtn. S. SRINIVASAN,** RC of Pudukkottai King Town
Secretary : **Rtn. T. ASOKAN,** RC of Pudukkottai King Town

**Date : 24-02-2020**
**Place : Hotel SRM, Trichy**












# PETS & SETS

## நுழைவாயில்

PETS Chairman : **Rtn. S. RAMESH,** RC of Dindigul West
SETS Chairman : **Rtn. B.T. DEERAJ,** RC of Dindigul Fort

**Dates : 6,7,8-03-2020**
**Place : Sterling Kodai Valley, Kodaikanal Vilpatti**













# நிற்க... அதற்குத் தக...

கோவிட் – 19 (**COVID - CO**rona **VI**rus **D**isease) என்ற வைரஸ் நோயானது 2019 ஆம் வருடம் டிசம்பர் மாதம் சீனாவில் கண்டறியப்பட்டுள்ளது. உலகின் பல நாடுகளுக்கும் பரவி உள்ளது. மனித சமுதாயத்துக்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது. கடந்த காலத்தில் SARS, Ebola, Swine Flu, Zika போன்ற பல விதமான கொடிய வைரஸ் தொற்றுக்கள் மனித சமுதாயத்தை ஆட்டிப் படைத்தது. அதில் எல்லாம் எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட மனித சமுதாயம் இந்த நோய்க்கு இதுவரை கிட்டத்தட்ட நான்கு இலட்சத்திற்கும் மேலான உயிர்களை பலி கொடுத்து விட்டது. இந்த நோயை வெற்றி கொள்ள உலகம் முழுவதும் அனைத்து நாடுகளும், அனைத்து அரசுகளும் இரவும், பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த வைரஸ் தொற்றிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தை எப்படி பாதுகாத்துக் கொள்வது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, கல்வி கற்க நல்ல நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு நாம் அறிந்த நல்ல விசயங்களை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பதே சிறந்ததாகும். இன்றைய காலக்கட்டத்தில் நாம் இப்பொழுது பேரிடராக எதிர்கொள்வது கொரோனா வைரஸ் COVID-19 எனும் கொடிய நோயாகும். இந்தியாவில் கொரோனா பாதிப்பில் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருப்பது பெருமைக்குரியது அல்ல. மிகவும் வேதனைக்குரியது. இந்த விசயமும் நமக்கு புதிது அல்ல. ஏறத்தாழ, கடந்த மூன்று மாதங்களாக செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் பல வித சமூக வலைத்தளங்களிலும் கொரோனா பற்றிய பல வித செய்திகளை அறிந்திருப்போம். இருப்பினும் இதைப்பற்றிய சில கருத்துக்களைக் கீழே காணலாம். கொரோனா பாதிப்பைப் பொறுத்த வரை நோயின் தன்மை ஆளுக்கு ஆள், உடல் நிலை, நோய்நிலை, துணை நோய்கள் உள்ள விபரம், பாதிப்பின் தீவிரம், உறுப்புகளின் செயலிழப்பு போன்ற பல அம்சங்களைக் கருத்தில் கொண்டே சிகிச்சையும் அமையும். இது ஒரு புறம் இருக்க, உண்மையா, பொய்யா என்று அறியாமல் நாள்தோறும் வெளியாகும் கொரோனா குறித்த பரபரப்பு செய்திகளுக்கு பஞ்சமில்லை. சமூக வலைத்தளங்களின் கற்பனைக் காட்சிகள் வீட்டில் அடங்கி இருப்பவர்களை உறங்க விடாமல் செய்கிறது.

இவ்வாறு இருக்கும் சமயத்தில் தனிமனித பாதுகாப்பு என்பது தான் மிக முக்கிய ஒன்று. அதாவது பொது இடங்களிலும், போக்குவரத்து பகுதிகளிலும் மருத்துவமனைகளிலும் மளிகை கடை, காய்கறி கடைகளிலும் முகக்கவசம் அணிவது என்பது இன்றியமையாமை ஆகும். இதோடு ஒருவருக்கொருவர் சமூக இடைவெளி கடைபிடிப்பதிலும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் கோவிட் 19 நோய்த்தொற்று பரவி வரும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். இருமல், காய்ச்சல், தலைவலி, தொண்டைவலி, மூச்சுத்திணறல் போன்ற அறிகுகள் இருப்பின் உங்கள் மருத்துவரைப் பார்த்து ஆலோசனை பெறவேண்டும். மேற்கண்ட அறிகுறிகள் கொரோனா வைரஸ்க்கு மட்டும் உரித்தான அறிகுறிகள் இல்லை. பல தொற்றுக் கிருமிகள் மூலமாக இது போன்ற அறிகுறிகள் வரலாம் அதனால் பயப்பட வேண்டாம். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

- வாய், கண், மூக்கு போன்ற பகுதிகளைத் தொடுவதை தவிர்க்கவும்.
- இருமும் போதும், தும்மும் போதும் உங்கள் முழங்கையைப் பயன்படுத்தி மூக்கு, வாயை மறைத்துக் கொள்ளுங்கள்.
- தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும்.

சர்க்கரை நோயாளிகள், இதய பாதிப்பு உள்ளவர்கள், சிறுநீரக பாதிப்பு ஆஸ்துமா/COPD உள்ளவர்கள் போன்றோருக்கு கோவிட் 19 பாதிக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது. கொரோனாத் தடுப்புக்காக ஹைட்ராக்சி குளோரோக்யின், அசித்ரோமைசின் போன்ற மாத்திரைகளை உங்கள் மருத்துவர் ஆலோசனையின்றி எடுத்துக் கொள்ளக்கூடாது. ஹைட்ராக்சி குளோரோக்யின் மாத்திரைக்கு இதயத்துடிப்பு தொடர்பான பக்க விளைவுகள் உள்ளது கடந்த ஒரு வாரமாக "டெக்சாமெத்தசோன்"என்ற மருந்தின் பெயர் தொலைக்காட்சி மற்றும் சமூக வலைதளங்களில் பேசப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக இம்மருந்து சில வியாதிகளுக்காக மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. இம்மருந்தை மருத்துவர் பரிந்துரையின்றி எடுத்துக் கொள்ளக்கூடாது. மேலும் "டெக்சா மெத்தசோன்" மருந்துக்கும் உடற்பருமன் உண்டாவது, நீரிழிவு ஏற்படுவது, நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைப்பது உள்ளிட்ட பலபக்க விளைவுகள் உண்டு. ஆகவே இம்மருந்தை சுய மருத்துவமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நோய் கடுமையாக உள்ளவர்களில் ஆக்ஸிஜன் செலுத்தப்படுவோருக்கு மட்டுமே "டெக்சாமெத்தசொன்" பலன் தரும் என்பதால் அவர்களுக்கு மட்டும் பயன்படுத்த முடியும். அதிலும் கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இந்த மருந்து ஆகாது. கொரோனா தாக்குதலின் போது உடலில் நோய்த் தடுப்பாற்றல் மண்டலத்தின் அதீத செயல்பாட்டால் "சைட்டோகைன் ஸ்டார்ம்" எனும் நிலைமை உருவாகிறது. இது நுரையீரல் உள்ளிட்ட உடல் உறுப்புகளில் காட்டுத்தீ போல் பரவி அலற்சியை ஏற்படுத்தி கொண்டு செல்கிறது. இந்த நிலையில் டெக்சாமெத்தசோனை செலுத்தினால் தீயை அணைக்கும் இயந்திரமாக அது செயல்படுகிறது. இந்த மருந்துக்கு அலற்சியைக் குறைக்கும் ஆற்றல் உள்ளதால் சைட்டோகைன் ஸ்டார்ம் ஏற்படுத்தும் அலற்சிகளைக் கட்டுப்படுத்தி நோயின் தாக்கத்தைக் குறைக்கிறது. ஆனால் இதுவே முழுமையாகக் குணப்படுத்தி விடும் என்று சொல்லவில்லை. செயற்கை சுவாசம் தேவைப்படாத ஆரம்ப நிலையில் உள்ள நோயாளிகளுக்கு இது பயன்படுவதில்லை.

கொரோனா பாதிப்பைக் குணப்படுத்தும் தனிப்பட்ட மருந்தாக இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. 19.06.2020 அன்று வெளி வந்த அறிக்கையின்படி கொரோனா நோய்க்கு தடுப்பூசி கண்டுபிடித்தல் ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என தெரிய வந்துள்ளது. தற்சமயம் 141 தடுப்பூசிகள் பந்தயத்தில் உள்ளன. தடுப்பூசி முழுமையாக கண்டுபிடிக்கப்பட்டு மனித பயன்பாட்டுக்கு வருமுன் அது பல சோதனைக் கட்டங்களைக் கடந்து வர வேண்டியுள்ளது. அதை pre-clinical trial stage & human trial stage என்றும் இரு வகையாகப் பிரிப்பார்கள் human trial stage phase I, II, III என மூன்று நிலைகளாக மனிதர்களுக்கு கொடுத்து தடுப்பூசியின் பாதுகாப்பு நிலையை உறுதி செய்வது. இந்த பந்தயத்தில் உள்ள 141 தடுப்பூசிகளில் 20 தடுப்பூசி மருந்துகள் மட்டுமே human trial stage ல் உள்ளது. இதுவரை கொரோனாவுக்கு எந்த தடுப்பூசியும் முழுமையாக ஒப்புதலுடன் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்படவில்லை.

கோவிட் 19 பாதிப்பால் ஏற்பட்டுள்ள மன அழுத்தத்தைப் போக்க யோகாவும் தியானமும் மிகச் சிறந்த சிகிச்சையாகத் திகழ்கின்றன என்பதை பல்வேறு ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள் நமக்கு உணர்த்தியுள்ளன. கொரோனா பாதுகாப்புக்காக நம் ரோட்டரி அறக்கட்டளை உலகம் முழுவதும் பல்வேறு சேவைகளைச் செய்து வருகிறது. இந்த மாபெரும் சேவை அமைப்பில் நான் உறுப்பினராய் இருப்பதில் பெருமிதம் அடைகிறேன்.



என்றும் ரோட்டரி சேவையில்

**Rtn. MPHF. PP. Dr. C. முரளிதரன்**
**Health Awareness Chairman**

# DTTS

# ஆத்திசூடி

Chairman : **Rtn. R. SUBRAMANI,** RC of Tiruchirapalli Diamond City
Secretary : **Rtn. RNK. RAJAN,** RC of Tiruchirapalli Diamond City

**Dates : 6,7-06-2020**
**Zoom Meeting**




# District Training Assembly

# தடம்

Chairman : **Rtn. J. Aravindhan,** RC of Perambalur Kings
Secretary : **Rtn. D. Ramesh,** RC of Perambalur Kings

**Dates : 13,14-06-2020**
**Zoom Meeting**






ரோட்டரி நண்பர்களுக்கு வணக்கம்,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.''

அதாவது அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி மகிழ்வர். இந்த குறளுக்கு எடுத்துக்காட்டாக நேரத்தையும், பொருளையும் இந்தச் சமூகத்திற்காகச் செலவிடும் ரோட்டரி உறுப்பினர்களில் நாமும் ஒரு அங்கம் என்பதில் பெருமிதம் கொள்வோம்.

அதேபெருமிதத்துடன் 2020–21, இந்த வருட தாரக மந்திரமான ''Rotary Opens Opportunities" என்று ரோட்டரி வாய்ப்புகளை உருவாக்கித் தரவும், புதிய வாய்ப்புகளை வரவேற்கவும் காத்திருக்கும் நமது ரோட்டரி மாவட்டம் 3000–தின் மாறாத மொழிப் பற்றும், ரோட்டரி பற்றும் கொண்ட "best" ஆளுநர் மற்றும் அவரின் வழிகாட்டுதலின் பேரில் சேவைகளை துவங்கி இருக்கும் உங்கள் அனைவருக்கும் ஆளுநரின்புதுக்–கோட்டையில் இருந்துவரும் இந்த 'கோட்டைமுரசு' அறிக்கையின் மூலம் கம்பீரமாக முழங்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

Teachers open doors; but you must walk through it yourself" என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது ஆசிரியர்கள் அறிவு என்னும் கதவைத் திறந்துதான் விடுவார்கள். நீதான் அதன் உள்ளே போகலாமா வேண்டாமா என முடிவுவெடுக்க வேண்டும். ரோட்டரி அமைப்பும் அப்படித்தான். வாய்ப்பு என்னும் கதவை திறந்து வைத்திருக்கிறது. அதனுள் நுழைந்து வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது நமது கையில் தான்உள்ளது.

Don't wait for the right opportunity. Create it என்பார்கள். ஆம், நண்பர்களே! நல்ல வாய்ப்பு வரட்டும் என காத்திருக்கவேண்டியதில்லை அதை நாம்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். சாமான்யனும் சாதிக்க வழிகாட்டுகிறது ரோட்டரி அமைப்பு. ஆண், பெண் வேறுபாடுகளைக் கடந்து நம் அனைவருக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் இங்கு இருக்கிறது. அதை சரியாக புரிந்துகொண்டு நமக்கான பாதையை தேர்ந்தெடுத்து அதில் ஆழமாக கற்றுக்கொண்டு பின்கற்றதையும், பெற்றதையும் தனித்துவபடுத்தி மக்களுக்காக கொடுக்கும்போது நம்திறன் வெளிப்படுகிறது. அப்போதுதான் நம்மால் ரோட்டரிக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் பெருமை சேர்க்க முடியும்.

அப்படி ரோட்டரி அமைப்பில் கற்றுக் கொண்ட எழுத்தாற்றல் மூலம் இன்று ஒரு எழுத்தாளராக 'பீனிக்ஸ் பெண்கள்' என்னும் வெற்றிகரமான, இளைஞர்களை சாதிக்கத் தூண்டும் நூலின் ஆசிரியராக, பதிப்பகத்தால் அதிகம் மதிக்கப்படும் ஆசிரியராக உள்ளதில் மகிழ்ச்சி. உண்மையில் மகிழ்ச்சி என்று கூறிவிடமுடியாது. ஏனெனில், சிந்திக்கும் ஆற்றல் சிதறாமல் இருக்க போராடி கொண்டு இருக்கிறேன். ஆக, ரோட்டரியில் கற்றுக் கொள்ளவும் பெற்றுக் கொள்ளவும் நிறைய வாய்ப்புகள் இங்கு இருக்கிறது.

கல்வி, பெருமைக்காகத் தேடிப்பெறுவது அல்ல, பெற்றதைக் கொண்டு பெருமை தேடித்தருவது. இப்படி, கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தநாம், தனிநபராகவும், ரோட்டரி அமைப்புடன் இணைந்தும் கல்வி நிறுவனங்களின் தரத்தை உயர்த்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள் (Smart Classroom), சுகாதார மேம்பாட்டிற்காக நல்ல கழிப்பறை வசதிகள், பெண்கள் சுகாதாரத்திற்கான கருவிகள், ஏழை எளிய குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது போன்ற பல சேவை திட்டங்களை செய்து வருகிறோம். இருந்தபோதிலும் இன்னும் கல்வி புகட்டப்பட வேண்டிய நிறையக் குக்கிராமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாகப் பெண்கள் புத்தகத்தை எடுப்பதை விரும்பாத குறுகிய வட்டத்துக்குள் இருக்கும் சமூகத்தை களையெடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். போலியோவிற்கு அடுத்து ரோட்டரி கையில் எடுத்திருக்கும் ஆயுதம் கல்வி. இதைச் சரியாகப் பயன்படுத்தி நம்மைச் சார்ந்துள்ள பகுதியை வறுமையால் கல்வியில் தடைபடும் மாணவர்களின் சதவிகிதத்தை பூஜ்யமாக்க வழிவகுப்போம். கல்வி கற்றவர்கள் சதவிகிதத்தை அதிகரிப்பதன் மூலம் ஒரு வறுமையற்ற சமூகத்தை உருவாக்க முடியும்.

மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலம் செய்க...
நலம் பெறவேண்டும் என்றால் நன்மை செய்க...
நம் பூமி மேலே புது பார்வை கொள்க...
நம் இயற்கை மேல் இன்னும் இச்சை கொள்க...
கொஞ்சம் நிலவுக்கு நேரம் வைத்து தூக்கம்கொள்க...
பாறைக்குள் வேரைப் போலே வெற்றி கொள்க...



என்ற கவிஞர் வைரமுத்து அவர்களின் வரிகளை நம்நினைவில் நிறுத்தி வெற்றிக்கு வழிவகுப்போம். வெற்றி தோல்வி அனைவருக்கும் பொதுவானது. தோல்வியில் கற்றுக் கொண்ட பாடம் அதுதான் நம் அடுத்தகட்ட வெற்றி.

'கோட்டைமுரசு'முதல் மாத இதழை சிறப்பாகவும், நேர்த்தியாகவும் வடிவமைத்துள்ள GML ஆசிரியர், துணை ஆசிரியர் உள்ளிட்டGML குழுவிற்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,
**Rtn. வினிதாமோகன்,** **GML Associate Editor, RC of Karur Angels**

# District Grants Management Seminar

ஊருணி

Chairman : **Rtn. CA. M. VENKATESWARAN,** RC of Theni
Secretary : **Rtn. PARTHIBAN,** RC of Theni Metro

**Date : 17-05-2020**
**Zoom Meeting**




# நம்பிக்கை நம் தும்பிக்கை

வணக்கம்,

ரோட்ராக்டர்களுக்கு உறுதுணையாக இருக்கும் ரோட்டரி பெருமக்களுக்கு நன்றி. வரவிருக்கும் ரோட்டரி ஆண்டினை "best" ஆண்டாக நடத்த சிறகை விரித்துப் பறக்க தகுந்த வாய்ப்புகளுக்கு காத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் மாவட்ட ஆளுநர் Rtn. A.L. சொக்கலிங்கம் மற்றும் மாவட்ட ரோட்டராக்ட் கமிட்டி சேர்மன் Rtn. C. பிரசாத் அவர்களுடன் இணைந்து மாவட்டத்தை வழிநடத்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

- கிராமப்புற மக்களுக்கு கையொப்பம் கற்றுத் தருவது மட்டுமல்லாமல் வங்கி விண்ணப்பங்கள் மற்றும் அனைத்து வித அரசு சான்றிதழ்களையும் எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்று பயிற்சி அளிக்கப்படும்.
- யாசகர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து, அவர்களை காப்பகத்தில் சேர்த்து அவர்களால் இயன்ற வேலைகளை செய்யவைத்து யாசகர் இல்லா மாவட்டத்தை உருவாக்குவோம்.
- மாவட்டங்களை இணைத்து ஓடை மற்றும் பெரிய வாய்க்கால்களில் சல்லடை அமைத்து பாலிதீன் பொருட்களை வடிகட்டி நீர் மேலாண்மையை மேம்படுத்துவோம்.
- ரோட்டரி மற்றும் சமூக ஆர்வலர்களை இணைத்து சீமைக் கருவேலமரங்களை அழித்து அங்கு நிழல் தரும் மரங்களை நடுவோம்.
- அனைவருக்கும் விழிப்புணர்வு என்பது தேவையான ஒன்று. அதற்காக அனைத்து துறை நிபுணர்களை இணைத்து கருத்தரங்க பயிற்சி மற்றும் ஊர்வலம் என அனைத்து தரப்பினருக்கும் சரியான விழிப்புணர்வு சென்றடைய முயற்சிகள் எடுக்கப்படும். இதில் ACT 1098, சமூக இடைவெளி, உடல் மற்றும் மன ஆரோக்கியம், நோய் தடுப்பு முறைகள் மற்றும் மேலும் பல விழிப்புணர்வு திட்டங்கள் நடத்த உள்ளோம்.
- கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமல்லாது அனைத்து தரப்பினருக்கும் சுயதொழிற் பயிற்சி நடத்த திட்டமிட்டுள்ளோம்.
- நமது மாவட்ட ரோட்டராக்டர்களுக்கு ரோட்டரியின் உதவியுடன் வேலை வாய்ப்பு முகாம் நடத்த திட்டமிட்டுள்ளோம்.
- நாளுக்கு நாள் குருதியின் தேவையும் குருதிக் கொடையாளர்களும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 30,000 தரவுகள் சேமிக்கப்பட்டு குருதியின் தேவையினை நம்மால் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்பாடுகள் நடைபெற உள்ளது.



"வானவில் தோன்றும் போது வானம் அழகாகிறது,
நம்பிக்கை தோன்றும் போது வாழ்க்கை அழகாகிறது...! "

**Rtr. K. சபரிநாதன்,** மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதி



best

# PROJECTS




Madurai Gems : Installation - June 18



Manavai Queens : Installation - June 25



Manavai Queens : Herbal House - June 25




Manapparai West : Installation - June 28



Manapparai West : Four wheeler donation to Vidivelli Old Age Home - June 28




Aranthai : Blood Donation - July 01




Dindigul : Installation - July 01



Thuraiyur : Installation - July 01

# PROJECTS



Tiruchirapalli Rock City : Installation - July 02


Aranthai : Installation - July 04


Trichy Gems Innovators : Installation - July 04


Trichy City : Installation - July 06


Jambukeshwaram : Installation - July 06


Trichirappalli : Installation - July 06




Dindigul Midtown : Installation - July 07



Dindigul Queencity : Installation - July 08

# PROJECTS




Madurai Blossom : Installation - July 10



Madurai Blossom - Donated 1000 masks & 5 litres of sanitizer to the Thirupuvanam GH - July 10




Pudukkottai : Installation - July 10




Pudukkottai Central : Installation - July 12




Aranthai : Vehicle Sanitization Station - July 13




Dindigul West : Installation - July 15

## Upcoming Events

**District Membership Seminar**

**August 9, 2020**

**Zoom Meeting**

**at 5.30 pm**

## திட்டங்கள்

மழைநீர் சேகரிப்பு

**August 1, 2020**

மரக்கன்றுகள் நடுதல்

**August 15, 2020**

# DISTRICT GOVERNOR'S INSTALLATION

Chairman : **Rtn. R. XAVIER,** RC of Pudukkottai
Secretary : **Rtn. RM. V. KATHIRESAN,** RC of Pudukkottai

**Date : 28-06-2020**
**Place : Mount Zion College of Engg. & Tech., Pudukkottai**
















For private circulation only

Published by
**Rtn. A.L. Chokkalingam,**
**District Governor,**
**No 79, Kambar Street, Charles Nagar,**
**Pudukkottai,**
**Tamil Nadu - 622 001**

**Kindly send articles, news of events and projects with a brief writeup and good resolution photographs for publication to gmlrid3000@gmail.com before the end of each month.**

Printed by **Sree Vinayaga Screens, S.S. Colony, Madurai - 625 010**
**Ph. : 0452-2600300, 999 444 6030**